தமிழ்நாடு அரசு

தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை

(உணவு பாதுகாப்பு பிரிவு)

எண்: ______________________ நாள்: ________________

உணவு பாதுகாப்பு அலுவலர் அலுவலகம்

___________________________________

___________________________________

___________________________________

உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம், 2006-ன் சட்டப்பிரிவு 38 (2) & உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் விதிகள், 2011-ன் விதி 2.1.3.4 (iii) (a) & (i)-ன் கீழ் அளிக்கப்படும் அறிவிப்பு

பொருள்: உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம், 2006 – உணவு பாதுகாப்பு கண்காணிப்பு – ஆய்வு குறிப்பு மற்றும் அறிவிப்பு சார்பு செய்தல் – தொடர்பாக.

-:oOo:-

தாங்கள் ________________________________________________________________________________ என்ற முகவரியில் ________________________________________________________________________________ என்னும் நிறுவனப் பெயரில் உணவுப் பொருள் தொழில் (Food Business) செய்து வருகிறீர்கள். ________________________ ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் ____________________ அன்று தங்கள் நிறுவனத்தில் மேற்கொண்ட ஆய்வின் முடிவுகள் பின்வருமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

☐ தற்சமயம் குறிப்பிடத்தக்க குறைபாடுகளோ சட்ட விதிமீறல்களோ கண்டறியப்படவில்லை. எனினும் குறிப்பிடத்தக்க குறைபாடுகளோ சட்ட விதிமீறல்களோ இப்போதிருந்தே உள்ளதென பின்னொரு ஆய்வின்போது கண்டறியப்பட்டால் உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம், 2006-ன் சட்டப்பிரிவு 26 (1) மீறப்பட்டதாக கருதப்பட்டு தங்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

☐ தற்சமயம் ஆய்வு அலுவலரால் கண்டறியப்பட்டு சுட்டிக்காட்டப்பட்ட எளிதில் களையத்தக்க குறைபாடு(Trivial Errors)களை உடனடியாக நிவர்த்தி செய்துவிட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

☐ தற்போதைய ஆய்வின் போது கண்டறியப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்ட ஆய்வறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்ட வகையில் அனைத்து குறைபாடுகளையும் சட்ட விதிமீறல்களையும் அவற்றுக்கெதிரில் குறிப்பிடப்பட்ட கால அவகாசத்திற்குள் நிவர்த்தி செய்து அதன் விபரத்தை அடியிற் கையொப்பமிட்ட ஆய்வு அலுவலருக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் எழுத்து பூர்வமாக தெரிவிக்கவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. தவறும் பட்சத்தில் ஆய்வறிக்கையில் குறிப்பிட்ட சட்டப்பிரிவு மற்றும் சட்டவிதிகளை தாங்கள் மீறியதாக கருதப்பட்டு சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

குறிப்புரை:-

ஆய்வு அலுவலர் கையொப்பம்

பெறுநர்

________________________________ அவர்கள்,

________________________________

________________________________

________________________________

________________________________

<u>உணவு தொழிலாற்றுநர் ஒப்புகை</u>

*FBO acknowledged*

✓ ____________________ மாவட்ட நியமன அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு
தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை
(உணவு பாதுகாப்பு பிரிவு)

எண்: ______________________ நாள்: ____________________ உணவு பாதுகாப்பு அலுவலர் அலுவலகம்
------------------------------------------------------------)
----------------------------------------------
--------- மாவட்டம்

உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம், 2006-ன் சட்டப்பிரிவு 38 (2) & உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் விதிகள், 2011-ன் விதி 2.1.3.4 (iii)(a)&(i)-ன் கீழ் அளிக்கப்படும் அறிவிப்பு

பொருள்: உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம், 2006 - சட்டவிதி மீறல்கள் - அறிவிப்பு சார்பு செய்தல் – தொடர்பாக.

-:oOo:-

தாங்கள் ______________________________________________________________

என்ற முகவரியில் ______________________________________________________________

என்னும் நிறுவனப் பெயரில் உணவு பொருள் வணிகம் செய்து வருகிறீர்கள். ______________________ அன்று ______________________ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் தங்கள் நிறுவனத்தில் மேற்கொண்ட ஆய்வின் போது பின்வரும் குறைபாடுகள் (**X** - குறியிடப்பட்டவை மட்டும்) கண்டறியப்பட்டுள்ளன.

| வ. எண் | | ஆய்வின்போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் | மீறப்பட்டுள்ள சட்டப்பிரிவு/ விதிமுறை/ஒழுங்குமுறைகள் | நிவர்த்தி/ திருத்தம் செய்வதற்கான காலவரையறை |
|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 |
| 1 | | தங்கள் உணவு வணிகத்திற்காக உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம், 2006-ன் கீழ் பதிவு செய்து கொள்ளவில்லை/உரிமம் பெற்றுகொண்டிருக்க வில்லை | சட்டப்பிரிவு; 31<br>சட்டப்பிரிவு;31(1)<br>உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை; 2.1.2.(1) | |
| 2 | | உணவு வணிக நிறுவனத்தில் பொதுமக்கள் பார்வையில் படும் வகையில் பதிவு சான்றிதழ் / உரிம சான்றிதழ் வைக்கப்படவில்லை | உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை; 2.1.1.(5)<br>உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை; 2.1.4.(6) | |
| 3 | | காலாவதியாகிவிட்ட பதிவு சான்றிதழ்/உரிம சான்றிதழ் புதுப்பிக்கப்படவில்லை | உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை; 2.1.2.(1) மற்றும் 2.1.7.(5) | |
| 4 | | கொள்முதல் மற்றும் விற்பனை குறித்த பதிவேடுகள் பராமரிக்கப்படவில்லை | உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை-இணைப்பு; 3 நிபந்தனை எண்;8 | |
| 5 | | உணவு வணிகம் சட்டவிதிகளின்படி சுகாதாரமான இடத்தில், சூழலில் மேற்கொள்ளப்பட வில்லை | உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை; 2.1.2. மற்றும் அட்டவணை 4 | |
| 6 | | உணவு தயாரிப்பு பகுதியில் தேவையான உறிஞ்சு சக்தியுடன் கூடிய புகை போக்கி அமைக்கப் படவில்லை; உணவு தயாரிப்பு பகுதி முழுவதும் புகை பரவி சுகாதாரக் கேடு ஏற்பட்டுள்ளது. | உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை அட்டவணை 4-ன் பகுதி-V | |
| 7 | | காலாவதியான உணவுப் பொருட்கள் விற்பனைக்கு/ இருப்பு வைக்கப்பட்டுள்ளன | சட்டப்பிரிவு; 27(2)(a) | |
| 8 | | சட்டவிதிகளின்படி விபரச்சீட்டு இல்லாமல் உணவுப் பொட்டலங்கள் விற்பனைக்கு/இருப்பு வைக்கப்பட்டுள்ளன | சட்டப்பிரிவு; 23(1) | |
| 9 | | சட்டவிதிகளின்படி தடைசெய்யப்பட்ட உணவுப் பொருட்கள் விற்பனைக்கு/இருப்பு வைக்கப்பட்டுள்ளன | சட்டப்பிரிவு; 26(2)(iv) | |
| 10 | | அனுமதிக்கப்படாத நிறமூட்டிகள் (colouring agents) உள்ளிட்ட பிற சேர்க்கை பொருட்கள் (additives) உணவு தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றன/ இருப்பு வைக்கப்பட்டுள்ளன | சட்டப்பிரிவு; 19(1) | |
| 11 | | பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது | உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை அட்டவணை 4-ன் பகுதி-V(II)(3)(e) | |
| 12 | | உணவு கையாளும் பணியாளர்கள் தன்சுத்தம் கொண்டிருக்கவில்லை; மருத்துவ உடல்தகுதி சான்று பெற்றிருக்கவில்லை | சட்டப்பிரிவு; 26(3) மற்றும் உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை; 2.1.1.(2)ன் படி அட்டவணை 4-ன் பகுதி-IIன் கீழ் நிபந்தனை எண்;10.1.2 | |

| வ. எண் | | ஆய்வின்போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் | மீறப்பட்டுள்ள சட்டப்பிரிவு/ விதிமுறை/ஒழுங்குமுறைகள் | நிவர்த்தி/ திருத்தம் செய்வதற்கான காலவரையறை |
|---|---|---|---|---|
| *1* | | *2* | *3* | *4* |
| *13* | | உணவு கையாளும் பணியாளர்கள் தேவையான அளவில் பாதுகாப்பான தலைமுடிகவசம்/கையுறை/முக கவசம் அணிந்திருக்கவில்லை | உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை; 2.1.1.(2)ன் படி அட்டவணை 4-ன் பகுதி-IIன் கீழ் நிபந்தனை எண்;10.2.1 | |
| *14* | | உணவு கையாளும் பணியாளர்கள் தன்சுத்தத்திற்கு தேவையான அளவில் சோப்புகள்/தண்ணீர் வசதி வைத்திருக்கவில்லை | உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை அட்டவணை 4-ன் பகுதி-V(I)(II)(1) | |
| *15* | | உணவுப் பொருள் இருப்புவைத்தல்/ தயாரிப்பில்/ பரிமாறுதலில்/போக்குவரத்தில் உபயோகப்படுத்தும் பாத்திரங்கள்/உபகரணங்கள் சுத்தமாக/ நச்சுத் தன்மையற்ற நிலையில் பராமரிக்கப்படவில்லை | உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை; 2.1.1.(2)ன் படி அட்டவணை 4-ன் பகுதி-I | |
| *16* | | உணவு தயாரிப்பில் அருந்தத்தக்க பாதுகாப்பான குடிநீர் பயன்படுத்தவில்லை | உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை; 2.1.1.(2)ன் படி அட்டவணை 4-ன் பகுதி-I | |
| *17* | | குடிநீர் சேமிப்பு முறை பாதுகாப்பாக அமைக்கப்படவில்லை | உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை; 2.1.1.(2)ன் படி அட்டவணை 4-ன் பகுதி-I | |
| *18* | | உணவுப் பொருட்களை மூடி வைப்பதற்கான வசதிகளை மேற்கொள்ளவில்லை | உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை; 2.1.1.(2)ன் படி அட்டவணை 4-ன் பகுதி-I | |
| *19* | | ஈக்கள், பூச்சிகள் முதலான தொற்றுகளை தடுக்கும் வசதிகளை மேற்கொள்ளவில்லை | உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை; 2.1.1.(2)ன் படி அட்டவணை 4-ன் பகுதி-I | |
| *20* | | கழிவுநீர் வெளியேற்றும் வசதி செய்யப்படவில்லை; குப்பைகள்/கழிவுகளை தினசரி அடிப்படையில் அகற்றும் வழிமுறை மேற்கொள்ளப்படவில்லை | உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை; 2.1.1.(2) மற்றும் (4)ன் படி அட்டவணை 4-ன் பகுதி-I & II | |
| *21* | | புகைபிடித்தல், எச்சில் துப்புதல் போன்ற சுகாதாரமற்ற நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டிருக்கவில்லை | உணவு வணிக உரிம/பதிவுகள் ஒழுங்குமுறை; 2.1.1.(2)ன் படி அட்டவணை 4-ன் பகுதி-Iன் கீழ் நிபந்தனை எண்;16 | |
| *22* | | அனுமதிக்கப்படாத விஷத் தன்மையுள்ள பொருட்கள் இருப்பில்/விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன | சட்டப்பிரிவு 3(zz)(i) மற்றும் சட்டப்பிரிவு 26(2)(i) | |
| *23* | | உணவு பாதுகாப்பு அலுவலரின் முந்தைய அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படவில்லை | சட்டப்பிரிவு; 55 | |

மேற்கண்ட குறைபாடுகளை அவற்றிற்கு எதிரே பத்தி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்குள் நிவர்த்தி/ திருத்தம் செய்து அதன் விபரத்தை அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச **காலவரையறைக்குப்பின் மூன்று** நாட்களுக்குள் கீழே கையொப்பமிட்டுள்ள உணவு பாதுகாப்பு அலுவலருக்கு எழுத்துபூர்வமாக தெரிவிக்க வேண்டும் எனவும் தவறும்பட்சத்தில் தங்கள்மீது சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

உணவு பாதுகாப்பு அலுவலர்

பெறுதல்

திரு./திருமதி./செல்வி. ______________________________________________ அவர்கள்,

______________________________________________________________________

______________________________________________________________________

மேற்படி அறிவிப்பு நகல் பெற்று கொண்டேன்

நகல் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாவட்ட நியமன அலுவலர், மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலகம், ____________.